REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 7 காசுகள் (0—1—0) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

திராவிடர் தினஇதழ் … இராணுவ(?) … [illegible]

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	... ...	ரூ. 6
ஆறு மாதம்	... ...	ரூ. 12
ஒரு வருடம்	... ...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 26உ திங்கள் (6—4—57) ★ ★ வெளியீடு: பங்குனி 27உ செவ்வாய் (9—4—57) [இதழ் 257

தீ விபத்தால் அவதிப்படுவோர்க்கு:

எம். ஜி. இராமச்சந்திரன் ரூ. 1000 அன்பளிப்பு

கழக ஆக்கப் பணியின் தொடர்ச்சி

பொதுச்செயலாளரிடம் உதவி நிதி வழங்கி புரட்சி நடிகர் கனிவுரை

சென்னை, ஏப். 9—

மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடுவதையே குறிக்கோளாகக் கொண்டு கடந்த எட்டு ஆண்டு காலத்திற்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருவது யாவரும் அறிந்த ஒன்றாகும். தமிழகத்தில் ஏற்பட்ட புயலாலும் புனலாலும் அல்லலுற்று அவதிக்குள்ளான ஏழை—எளியவரின் கண்ணீரைத் துடைப்பதற்குத் தி. மு. கழகத் தோழர்கள் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் துச்சமென மதித்துப் பெரும்பணியாற்றி, அவர்தம் துயர்துடைக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை நாடறியும்! அந்த நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், தங்களாலான உடலுழைப்பையும், பொருளாதார உதவியையும் அளிக்கச் சிறிதும் பின்தங்கியதில்லை.

அந்த ஆக்கப்பணியில், தொடர்ச்சியாக சென்னை நகரத்திலுள்ள ஏழை மக்கள் வதியும் குப்பமொன்று பெருந் தீவிபத்துக்குள்ளாகி, அதன் காரணமாக பல ஏழை எளியவர் வீடிழந்து தவித்துக்கொண்டிருக்கின்ற பரிதாபகரமான நிலையில், அவர்களுக்கு உதவி புரிய திராவிட முன்னேற்றக் கழகம் முன்வந்துள்ளது.

இந்த உதவிக்காகப் புரட்சி நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ரூ. 1,000 பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் நன்கொடையாகத் தந்து அவதியுறும் மக்களின் கண்ணீரைத் துடைக்கக் கோரினர்.

நேற்று மாலை சென்னை திருவேட்டீசுவரன் பேட்டை திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகங்கள், துணை அமைப்புகள் சார்பில், சென்னை சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற கழக எம். எல். ஏ.-க்களைப் பாராட்டி நடைபெற்றக் கூட்டத்தில், கலந்துகொண்ட புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அந்நிதியினை வழங்கினர்.

நிதியைப் பெற்றுக்கொண்ட பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புரட்சி நடிகரின் சீரிய வள்ளல் தன்மையைப் பாராட்டி, பொதுமக்கள் சார்பிலும் தலைமைக் கழகச் சார்பிலும் தமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு அந்நிதியினை சார்புடைய தோழர்களுடன் கலந்து, தீ விபத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் ரூ. 1,000 நிதியைப் பொதுச்செயலாளர் அவர்களிடம் அளித்தபோது, கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் ஆரவாரம் செய்து, புரட்சி நடிகரின் எடுத்துக்காட்டான அன்பளிப்பைப் பெரிதும் பாராட்டினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் நிதியை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நான், இதுபோன்ற அவதிப்படும் ஏழை-எளியவருக்கு என்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என விரும்புபவன்; ஆனால், இந்த நாட்டு சர்க்கார் இயற்றிவைத்திருக்கும் சட்டங்கள் என்னை, அவ்வாறு செய்யவொட்டாமல் தடுத்து நிறுத்துகிறது! ஏனெனில், ஒரு ஏழை நண்பனுக்கு உதவியாக அளிக்கின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் நான் வருமான வரி செலுத்தியாக வேண்டியவனாகயிருக்கிறேன். கல்வி வசதிகளுக்கு செய்யும் உதவிகளுக்கு — அளிக்கும் தொகைகளுக்கு மட்டும் வருமான வரி கிடையாதாம்; ஆனால், இந்த நேரத்தில்— இதோ தீ விபத்துக்குள்ளாகி அவதிப்படும் ஏழை-எளியவருக்கு எவ்வாறு உதவியளிப்பது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை,

"அதிலும், இவ்வாறு கொட்டிக் கொடுக்கப்படுகிற வரிப் பணத்தை நம்மால் அனுபவிக்க முடிவதில்லை. அத்தனையும் டில்லிக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. இந்த அவல நிலை நீங்க, நாடு நமதானால் தான், நமது வரிப் பணத்தை நமது நாட்டு மக்களே அனுபவிக்க இயலும்."

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், காங்கிரஸ்காரர்கள் சென்ற தேர்தலில் நடந்துகொண்ட முறைகளை விளக்கியதுடன், அந்த நேரங்களில் கழகத் தோழர்கள் கடைபிடித்த கண்ணியத்தைப் பாராட்டியும், தான் ஒவ்வொரு கிராமத்திலும் கண்டறிந்த கழக ஆதரவினையும், எதிர்காலத்தில் கழகத்தின் வளர்ச்சி எப்படியெல்லாம் இருக்கும் என்பதையும் விளக்கினார்.

தேர்தலில் மற்ற மாவட்டங்களைவிட தி. மு. கழகத்திற்கு சென்னை நகரம் தந்த அபரிமிதமான ஆதரவுக்குத் தனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், சென்னை சட்டசபைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக அபேட்சகர்களைப் பாராட்டினர்.

பொலிட்பீரோ உறுப்பினர் பதவி

கேரள முதலமைச்சர் துறந்துவிடுவார்?

திருவனந்தபுரம், ஏப். 8—

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் பதவியை, கேரளத்தில் முதலமைச்சராக பதவியேற்றிருக்கும் சங்கரன் நம்பூதிரிபாடு இராஜிநாமா செய்துவிடக்கூடுமாம்; ஆனால் இது சம்பந்தமாக இறுதி முடிவு எதும் இன்னும் மேற்கொள்ளவில்லையாம்!

அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி!

ஜகார்த்தா, ஏப். 6—

தென் சுமத்திராவில் இராணுவ ஆட்சியை எற்கமறுத்து, இராணுவத் தலைவர்கள் குழு ஒன்று அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றுவருவதாகச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

சென்னை, ஏப். 6—

சென்னை சட்டசபையின் முதல் கூட்டம் இம்மாதம் 26-ந் தேதி துவங்கும் என தெரியவருகிறது.

கேரள கம்யூனிஸ்டு மந்திரி சபைக்கு ஆபத்து?

காங்கிரஸ் பொதுச்செயலாளர் அச்சுறுத்தல்

திட்டம் கண்டு வருந்துவதாக விமர்சனம்

'கேரளத்தில் கம்யூனிஸ்டு மந்திரி சபைக்கு ஆபத்தா?'—என்ற கேள்வி இப்போதே எழுவதாகத் தோன்றுகிறது!

காங்கிரஸ் பொதுச்செயலாளரான ஸ்ரீமன்நாராயணன், கம்யூனிஸ்டு மந்திரி சபையை அச்சுறுத்தியிருப்பது இந்தக் கேள்வி எழுவதற்கான அடிப்படை என்றும் கூறப்படுகிறது.

திட்டத்திற்கு எதிர்ப்பு

வரி விதிப்பு மூலம் மாநில சர்க்காரின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வழி செய்யும் வகையில் மத்திய சர்க்கார் தங்களின், கொள்கையைத் திருத்தியமைத்துக் கொள்ள வேண்டி வரும் என்று கூறும் கம்யூனிஸ்டு சர்க்காரின் கொள்கை விளக்க அறிக்கை கேட்டு தாம் வருந்துவதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன்நாராயணன் கூறினாராம்.

'பிரமிக்கத் தகுந்த திட்டங்களைக்காட்டி, அவற்றை நிறைவேற்ற முடியாது போகும்போது மத்திய சர்க்காரையோ, அரசியல் சட்டத்தையோ கம்யூனிஸ்டுகள் குற்றம் கூறுவார்களேயானால், அதைத் தாம் ஏற்க முடியாது' என்றும் அவர் கூறினாராம்.

'சர்க்கார் இயந்திரத்தை, கேரளத்தில் ஒரு சர்வாதிகார நிலையை உருவாக்கப் பயன்படுத்துவார்களேயானால் அதனை மத்திய சர்க்காரும், மக்களும் கவலையோடு கூர்ந்து கவனிக்க வேண்டியவராவர்' என்றும் அவர் அச்சுறுத்தினாராம்!

★

அரசியல் கைதிகள்

அனைவரும் விடுதலை?

மரண தண்டனை குறைப்பு

கேரளத்தில், கம்யூனிஸ்டு மந்திரி சபை பதவி ஏற்ற தினமான ஏப். 5-ந் தேதியன்று நிறைவேற்றப்பட வேண்டிய எல்லாத் தூக்குத் தண்டனைகளையும் குறைத்துவிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

காங்கிரஸ் ஊழியர் ஒருவரைக் கொலை செய்ததாக மரண தண்டனை விதிக்கப்பட்ட வாசு பிள்ளை என்பவருக்கும் இந்த உத்தரவு பொருந்தும்.

இம்முடிவின் காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட 10 பேர்களின் உயிர் காப்பாற்றப்படக்கூடும்.

அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கவும், மற்றக் கைதிகளின் சிறைத் தண்டனையை 'வஜா' செய்யவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

பைசல் செய்யப்படாத அரசியல் கைதிகளின் வழக்குகளும் வாரண்டுகளும் 'வாபஸ்' பெறப்படுமாம்.

உறுதிமொழிகளைக் காப்பாற்ற முடியாது போனால்!

'அதற்குப் பொறுப்பாளிகள் நாங்களல்ல'

கேரள சர்க்கார் நிலைபற்றி சுந்தரய்யா

நெல்லூர், ஏப். 6—

"கேரளத்தில் அமைந்துள்ள முதல் கம்யூனிஸ்டு சர்க்கார் இயங்குவதற்கு மத்திய சர்க்காரோ, அல்லது அவர்களது கையாட்களோ தடைகளை விதிப்பார்களேயானால், கம்யூனிஸ்டுகள் ஓட்டுப்பெட்டியில் வைத்துள்ள நம்பிக்கையைவிடுத்து, 'பலாத்காரத்தில்' இறங்க வேண்டியிருக்கும்"

என்று கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினரான சுந்தரய்யா கூறியதாகச் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன.

நெல்லூரில் நடைபெற்றக் கேரள தினக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், 'கேரளத்திலிருந்து பிரமாதமான விளைவுகள் கிடைக்கும் என்று நான் உறுதியளிக்க முடியாவிட்டாலும், சாதாரண மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவது எப்படி என்பதில், புதியதோர் வழியை நாங்கள் காட்டமுடியும்' என்றும் கூறியதாகச் செய்திகள் கூறுகின்றன.

"நாங்கள் மக்களுக்குத் தந்துள்ளவாக்குறுதிகளை நடேற்ற முடியாது போய்விட்டால், அதற்குக் காரணம், வேறெங்காவது காணப்பட வேண்டும். நாங்கள் பொறுப்பாளிகளாகயிருக்க முடியாது" என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

"எனவே, கம்யூனிஸ்டுக் கட்சி சர்க்காரின் வழியில் நிரவிக்கிடக்கும் தடைகளை நீக்குமாறு மத்திய சர்க்காரை, இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் நிர்ப்பந்திக்க வேண்டியது இந்த நேரத்தில் அவசியமாகும்" என்றும் கூறியதாகச் செய்திகள் கூறுகின்றன.

முறைகேடுகளை எதிர்த்து உண்ணுநோன்பு!

கல்கத்தா, ஏப். 7—

செவிடர்களுக்கும், குருடர்களுக்கும் வாழ்வளிக்கும் நோக்குடன் நடத்தப்படும் பள்ளியில் தலைமை ஆசிரியரும், மற்றொருவரும் முறைகேடாக நடந்து கொள்வதைக் கண்டித்து, பள்ளியிலுள்ள 13 மாணவர்களும் பள்ளியின் வாயிலில் அமர்ந்து உண்ணுநோன்பை மேற்கொண்டுள்ளனராம்.

அவர்களில் சிலர் பெண்கள் என்றும், எல்லோரும் ஒருமுகமாக தலைமை ஆசிரியரையும், மற்றொருவரையும் நீக்கவேண்டும் என்றும் கோரி இந்தப் போராட்டத்தைத் துவக்கியுள்ளனராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—4—57 திங்கள்

பொதுவுடைமையர் ஆட்சி

• கேரள ஆட்சி பொதுவுடைமையர் கைக்கு மாறியிருக்கிறது. இதன் பலனாக, அங்கு அரசியல் துறையை அலக்கழித்துக் கொண்டிருந்த நிலையற்றத் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இதை, பொதுவுடைமையர் ஆட்சி பொறுப்பேற்றதின் விளைவாக, அப்பகுதி மக்களுக்குக் கிடைத்துள்ள முதல் இலாபம் என்றே குறிப்பிடவேண்டும்.

தங்களைப் பெரும் அளவில் பொதுமக்கள் தேர்ந்தெடுத்ததற்கும், காங்கிரசுக் கட்சியினரையும் மற்ற கட்சியினர்களையும் விரட்டியடித்ததற்கும் மக்களில் பெரும்பான்மையினருக்குள்ள கொள்கை பிடிப்பே முக்கிய காரணமாகும் என்று பொதுவுடைமைக் கட்சியினர் கூறுகின்றனர். ஆனால் அது வெறும் 'சுக்கிரதிசை' என்று காங்கிரசுக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் பெருந் தலைவராக உள்ள இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

இவ்விரு சாரார் கருத்தும் மிகைபடக் கொள்ளப்பட்ட கூற்றேயாகும் என்று, கேரளத் தேர்தலில் கணிசமான தோல்விகண்ட மற்ற அரசியல் கட்சியினர் சொல்லக்கூடும். இவர்கள் அனைவரின் கருத்திலும் உண்மை இருந்தாலும் இல்லாமற்போனாலும், ஆட்சிப் பொறுப்பேற்கத் தேவைப்படுகின்ற அளவு எண்ணிக்கை பலத்தைக், தேர்தலில் பொதுவுடைமைக் கட்சிக்குப் பொதுமக்கள் அளித்துள்ளனர் என்பதே நடைமுறை உண்மையாகும்.

துப்பாக்கி ஆட்சியும், அது ஒழிக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியும் என்ற முறையில் உள்ளடங்கி இருக்கும் அவச்சொல், கேரளப் பொதுமக்களைத் தலைகுனிய வைத்திருக்கிறது. அந்த அவச்சொல்லிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள வேண்டும் என்ற பொதுமக்களின் தன்மான உணர்வுக்கும், தேர்தலில் பொதுவுடைமைக் கட்சியினர் பெரும் எண்ணிக்கையில் வெற்றி பெற்றதற்கும் எந்த விதத் தொடர்பும் இருக்காது என்று எவராலும் சொல்ல முடியாது. பொதுவுடைமைக் கட்சிக்குத்தான் ஒரு வாய்ப்பைத் தந்து பார்ப்போமே என அம்மக்கள் கொண்ட புது மனப்போக்கையும் புறக்கணித்துவிடக்கூடாது. நிற்க,

நல்வாழ்வைத் தங்களால் மட்டுந்தான் தேடித் தரமுடியும் என்று தங்களையே பெரிதும் மக்கள் நம்பிக் கொண்டிருப்பதாகக் காங்கிரசுக் கட்சியினர் இதுவரை பறைசாற்றி வந்தனர். அத்துறையில் காங்கிரசுக் கட்சியினரின் வாயடைத்துப் போகும் அளவிற்கு, கேரள மக்கள், பொதுவுடைமைக் கட்சியினிடம் ஆட்சியை ஒப்படைத்திருப்பதின் மூலம், காங்கிரசுக் கட்சியினருக்குப் படிப்பினை போதித்துள்ளனர்.

இக்கேரள சம்பவத்தின் மூலம் மற்ற பகுதி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினையும் உண்டு. காங்கிரசுக் கட்சியினர் செய்துவரும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தோம் என்ற சொத்தை வாதமும், வயது வந்தோர் வாக்குரிமை அளித்துள்ளோம் என்ற பொருத்தமற்றப் பேச்சும் பண்டிதரின் தனிச் செல்வாக்கும், மக்களின் ஆதரவைத் திரட்ட இனி காங்கிரசு கட்சிக்குப் பயன்படப்போவது கிடையாது என்பதே அவ்வுண்மையாகும்.

மத்தியிலும் மாகாணங்களிலும் இதுவரை காங்கிரசு கட்சியே அரசோச்சி வந்திருக்கிறது. மத்திய ஆட்சிக்கும் மாகாண ஆட்சிகளுக்கும் உள்ளூடாக எவ்வளவு கொந்தளிப்புகள் இருந்தபோதிலும், அவை அனைத்தையும் கூடுமானவரை மூடிமறைத்து, தாங்கள் ஒத்தக் கருத்துடனும் திறம்படவும் ஆட்சிபுரிந்துவருவதாகக் காங்கிரசு தம்பட்டம் அடித்து வந்தது. கேரள ஆட்சி மாற்றத்தின் காரணமாக, இனி அதற்கு இடமில்லாது போகிறது. இதிலிருந்தும் மக்கள் பெறப்போகின்ற பாடம் ஏராளம்.

காங்கிரசுக் கட்சி நீங்கலாக நாடாளும் ஆற்றல், மற்ற எதிர்க் கட்சிகளுக்கும் உண்டு என்பதை கேரளப் பொதுவுடைமையர் ஆட்சி மெய்ப்பிக்கக்கூடும். அதே நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான், பொதுவுடைமைக் கட்சி கேரள ஆட்சியைக் கைப்பற்றத் துணிந்திருக்கின்றது என்ற உண்மை, முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்கள், பதவி ஏற்ற நேரத்தில் தந்துள்ள கொள்கை—நடைமுறை விளக்கம் மூலம் தெளிவாகிறது.

கேரளப் பொதுவுடைமைக் கட்சியினர் வெளியிட்டுள்ள பதினைந்து அம்ச வேலைத் திட்டங்களில், வருமானத்தைப் பெருக்கக்கூடிய சிலவற்றை உடனடியாக செயலாற்ற முடியாத அளவு, அரசியல் திட்டம் முட்டுக்கட்டையாக இருக்கிறது. அரசியல் திட்ட விதிகளுக்கு உட்பட்டு, தாங்கள் விரும்பியவண்ணம் செயல்பட முடியாது என்ற உண்மையை, அவர்களே மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றார்கள் என்பதை அவர்களே தாங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலே குறித்துக் காட்டி இருக்கிறார்கள்.

இந்தியப் பேரரசு கடைப்பிடித்துவரும் போக்கு பற்றியும் அவ்வறிக்கை அதிருப்தி தெரிவித்திருக்கிறது.

"நாட்டின் மற்றப் பகுதிகளுக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் கேரளத்திற்கு முன்னேற்ற ஏற்பாடுகள் இன்றியமையாததாகும். ஆனால், மற்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதைக் காட்டிலும் இங்குதான் குறைவாக மேற்கொள்ளப்படுகிறது,"

என்று அவ்வறிக்கை எடுத்துக் காட்டுகிறது. அதுவுமின்றி, சணல் உற்பத்திச் செய்யும் வங்காளமும் மற்ற மாகாணங்களும் அப்பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தில் ஒரு பகுதியைப் பெற்று வருகின்றன. கேரளத்துப் பொருட்களான கொப்பரை, மிளகு, இரப்பர், முதலியவற்றின் வருமானத்தில் கேரளத்திற்கு ஏற்பாடு இல்லை" என்றும் இந்தியப் பேரரசின் போக்கு, அவர்கள் அறிக்கையில் விளக்கப்பட்டு இருக்கிறது.

கேரளப் பொதுவுடைமை ஆட்சி, தாம் நிறைவேற்ற விரும்பும் ஒவ்வொரு நல்லத் திட்டத்தையும், சுலபமாக நிறைவேற்றிவிடக்கூடிய நிலையில் அரசியல் சட்டம் அமைந்திருக்கவில்லை. எனவே, அக்கட்சி எதிர்பார்க்கின்ற கால அளவிற்கும் குறைவாக, அரசியல் சட்டத்தை மாகாணங்களுக்கு அனுகூலமாகத் திருத்தி அமைக்கவேண்டும் எனத் தீவிரமாகக் கோரவேண்டிய கட்டாயம், அக்கட்சிக்குத் தானாக ஏற்பட்டே தீரும் என்பது மிகையாகாது.

காங்கிரசு ஆட்சியைவிட பொதுவுடைமைக் கட்சியினர் ஆட்சியில் கேரள மக்கள் நலம் பெறக்கூடும் என எவரும் நம்பும் வகையில், அக்கட்சியின் வேலைத் திட்ட அறிக்கை அமைந்திருக்கிறது. அதே நம்பிக்கையில், நாமும் கேரளப் பொதுவுடைமை ஆட்சிக்கு நல்வரவு கூறுகிறோம். இதயபூர்வமான வாழ்த்துக்களையும் உரிமையாக்குகிறோம்.

'தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் உத்தரவு மூலம் நிறைவேற்றமுடியாது'

'அத்தகைய மனோபிராந்தி எங்களுக்கு இல்லை'

'அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு சாத்தியமான முயற்சிகளைச் செய்வோம்'

கேரள பொதுவுடைமைக் கட்சியினர் எதிர்காலப்பணி

திருவனந்தபுரம், ஏப். 5—

பதவியேற்றவுடன், கேரள மாநிலத்தில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்யப்போகிறோம் என்பதை விளக்கி, முதலமைச்சர் நம்பூதிரிபாத் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார். கேரள அமைச்சர் அவையின் கொள்கைகளைப்பற்றிய விளக்கம் அதில் காணப்படுகிறது. அதன் தொகுப்பு வருமாறு:—

"ஜனநாயக, வளம்மிகுந்த கேரளத்தை உருவாக்க கம்யூனிஸ்டு கட்சி எடுத்துக்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள், ஏற்கனவே சட்டசபைத் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதே எங்கள் பேரவாவாகும். இவைகளை சர்க்கார் ஒரு நாள் காலையில் உட்கார்ந்து உத்தரவிடுவதன்மூலம் நிறைவேற்றிவிடலாம் என்ற மனோபிராந்தி எங்களுக்கில்லை. மக்களும் அவ்விதம் நினைக்கமாட்டார்கள். சர்க்கார் உத்தரவு மூலம் உடனடியாக நிறைவேறக்கூடிய சில திட்டங்கள் இருக்கின்றன. மற்றும் சிலவற்றை சர்க்கார் உத்தரவுகள் மூலம் நிறைவேற்ற முடிந்தாலும் சற்று காலதாமதமாகும். மேலும் சில திட்டங்களை மசோதா மூலம் பிரசுரித்து சட்டம் இயற்றுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். இதற்குக் காலதாமதமாகுமாதலால், சில இனங்களில் அவசர உத்தரவுகள் பிறப்பித்து மக்களுக்கு தற்காலிக நிவாரணம் அளிப்பது சாத்தியமாகலாம். வேறு சில விஷயங்கள் இருக்கின்றன. இவை சம்பந்தமாக மற்ற கட்சிகளுடனோ, குழுவினருடனோ, மத்திய சர்க்காருடனோ பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமாக இருக்கலாம். இந்த நடைமுறைகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுசரித்த பின்புதான், எங்கள் திட்டங்கள் பூராவையும் நிறைவேற்ற முடியும்.

நிலச் சீர்திருத்தம்

"இந்த மாநிலத்தில் விவசாயப் பிரச்சினை சிக்கலானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர்; ஆகவே, விவசாய சீர்திருத்தங்களை வகுக்க சம்பந்தப்பட்ட மக்களை கலந்தாலோசிப்பது அவசியம். ஏற்கனவே சில பரவலான கொள்கை முறை வகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் விவாதம் நடத்தப்படும். திட்டக் கமிஷன் நிலச் சீர்திருத்தக் குழு வகுத்த கொள்கை முறையை காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பி. சோ. கட்சிகளும், குடியானவர் நிறுவனங்களும் ஆதரித்திருக்கின்றன. நியாய வாரம் நிர்ணயித்தல், குடியானவருக்கு நிரந்தர குடி பாத்தியதையை நிர்ணயித்தல், கேரளத்தில் நிலவும் விசித்திர நிலைமையைக் கருத்தில் கொண்டு நில உடைமைக்கு உயர் வரம்பு கட்டுதல், எஞ்சிய உபரி நிலத்தை விநியோகித்தல், சிறு நிலச் சுவான்தார்களுக்கு நேர்மையான பாதுகாப்பு அளித்தல் ஆகியவை சம்பந்தமாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் மசோதா தாக்கல் தயாரிக்க உத்தேசித்திருக்கிறோம். இந்தச் சீர்திருத்தங்களை வகுக்கும்போது குடியானவர்களுக்கு உடனடியாக நிவாரணமளிக்க—குடியானவர்கள் வெளியேற்றப்படுவதைத் தடுக்க உடனடியாக அவசரச் சட்டம் கொண்டு வருவது அவசியமாகும்.

வருவாய் பெருக்கம்

"அபிவிருத்தித் திட்டங்கள் நிதித் தொல்லை காரணமாக நிறைவேற்றப்பட மாட்டாது என்று பலர் சந்தேகப்படுவதற்கு ஆதாரமே இல்லை; ஏற்கனவே சர்க்கார் நிர்வாகத்தில் பல நிறுவனங்களும், தொழில்களும் உள்ளன. இவற்றை மேலும் திறமையாக நடத்துவதன் மூலம் சர்க்காருக்கு மேலும் வருவாய் கிடைக்கும்.

"தற்போது சில தொழில் நிறுவனங்கள் தனி நபர்களிடம் இருக்கின்றன. இவற்றை சர்க்கார் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர முடியும். இவற்றை சர்க்கார் மேற்கொள்வதால் இவற்றின் நிர்வாகத் திறமை அதிகரிப்பதுடன் நாட்டிற்கும் அனுகூலம் விளையும்; இவற்றிலிருந்து சர்க்காருக்கு வருமானமும் கிடைக்கும்.

"மேலும் பல வரி இனங்கள் அரசியல் சட்டப்படி மாநில சர்க்கார் அதிகார எல்லைக்குட்பட்டிருந்தும் பயன்படுத்தப்படாமலிருக்கின்றன. ஏழைகள்மீது வரிச் சுமையைப் போடாமல் சர்க்கார் இத்தகைய இனங்கள் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். இந்த வரி இனங்களைப் பயன்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. இந்த வரி இனங்களைப் பயன்படுத்துவதற்காக மத்திய சர்க்கார் தற்போது கடைப்பிடிக்கும் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டிவரும்.

வங்கத்தைப் பின்பற்றி!

"மாநிலங்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே தற்போது, நிதி ஒதுக்கப்படும் முறை கேரளத்திற்குச் சாதகமாயில்லை. சணல் பயிராகும் மேற்கு வங்கம் முதலிய மாநிலங்கள் சணல் தொழிலிலிருந்து மத்திய சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்கின்றன.

"கேரளத்தில் உற்பத்தியாகும் தேங்காய், மிளகு, இரப்பர் மூலம், மத்திய சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானத்தில் கேரளத்திற்குப் பங்கு எதுவும் கிடைக்க வசதி செய்யப்படவில்லை.

அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு!

"மேலும் தோட்டத் தொழிலை தேசியமயமாக்குவது கூடாது என்று மத்திய சர்க்கார் கூறுகின்றனர். கேரளத்தில் தோட்டங்களை மாத்திரமே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதன் அபிவிருத்திக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் கிடைக்கும்.

"கேரள மாநிலத்தின் நிதிக் கஷ்டத்தைச் சமாளிக்க இத்தகைய வரிகள் உதவியபோதிலும், பணக்காரர்கள் மீது வரி விதிப்பதை மத்திய சர்க்கார் எதிர்க்கின்றனர். இந்த அம்சங்களில், மத்திய சர்க்கார் கொள்கையை மாற்ற இம்மாநில சர்க்கார் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு சாத்தியமான முயற்சிகளைச் செய்யும்.

முதலாளி-தொழிலாளர் நல்லுறவு

"ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற முதலாளிகளுக்கும் — தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவு நிலவுவது அவசியமாகும். சாத்தியமானவரை வேலை நிறுத்தங்களையும், கதவடைப்புகளையும் தவிர்த்து ஒவ்வொரு தகராறையும் அப்போதைக்கப்போது தீர்த்துக்கொள்வதே நல்லது. உற்பத்தி தங்குதடையின்றி நடந்து கொண்டிருக்கவேண்டும். தொழிலாளர் நிறுவனங்களை முதலாளிகள் அங்கீகரிக்கத் தயங்குவதே தொழில் அமைதிக்கு முக்கிய தடங்கலாக இருக்கிறது. முதலாளிகள் மனோபாவத்தை மாற்ற இம்மாநில சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்யும்.

"விவசாயத் தொழிலாளர், நடுத்தர வகுப்பு சிப்பந்திகளின் (என். ஜி. ஓ.-க்கள் உட்பட) சம்பள விகிதம், சேவை நிலைமையை ஒழுங்குபடுத்த சர்க்கார் முயற்சிக்கும்.

சுலபமான காரியமல்ல!

இந்தத் திட்டங்கள் நிறைவேற, நிர்வாகத்தில் இலஞ்ச ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைத்து கண்ணியமான அரசாங்கத்தை சிருஷ்டிக்க வேண்டும். இது சுலபமான காரியமல்ல என்றாலும், விடாமுயற்சியுடன் போராடினால் இதைச் சாதிக்க முடியும். கம்யூனிஸ்டு சர்க்கார் இம்மாபெரும் வேலையை மேற்கொள்ளும்; அதற்கு மக்கள் உதவவேண்டும்.

"கேரள மாநிலத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக கம்யூனிஸ்டு கட்சி வகுத்தத் திட்டத்தை நிறைவேற்ற எல்லா தரப்பு மக்களையும் கலந்தாலோசிக்கப்படும்.

தாய் மொழியில்!

"சட்டசபை, சர்க்கார் அலுவலகம் இவற்றிலும், நிர்வாகத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

உழைப்பின் சக்தியே உலக நாகரிகங்கள்

வாழ்க்கைக்கு இன்றியமையாத சக்திகள் குறைவதால் விபரீத விளைவுகள் ஏற்படும்

அரும்பியுள்ள அணுயுகம் மக்கள் உயிர் வாழ்க்கைக்கு செய்யப்போகும் நன்மை என்ன?

இந்திய விஞ்ஞானி விளக்கம் தருகிறார்

உழைப்பின் சக்தியால் உலக நாகரிகங்கள் அமைவதையும், சக்திக் குறைவு நாகரிக வளர்ச்சியைத் தடை செய்வதையும், அணுயுகம் அரும்பி மலரும் காலத்தில் சக்தி அளவின்றிக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதையும் இந்திய அணுசக்திக் குழுத் தலைவர் டாக்டர் பாபா அவர்கள் விளக்கியுள்ளார். அவர் கூறியுள்ளதாவது :—

"உலக வரலாற்றில் மூன்று பெரிய காலங்களைக் காணலாம்; இம்மூன்றும் மூன்று யுகங்களாகும். முதல் யுகம் - யூப்பிரட்டீஸ், சிந்து, நைல் என்னும் ஆறுகளை அடுத்து வாழ்ந்த மக்களின் பழைய நாகரிகங்கள் முகிழ்த்த காலம். இரண்டாவது யுகம் - தொழிற் புரட்சி தோன்றிய காலம்; இதனால் உருவானதே நாம் இன்று வாழும் நாகரிகம். மூன்றாவது யுகம் - இப்போதுதான் தொடக்கம்; இதுதான் அணுசக்தியைக் கண்டுபிடித்து அணுயுகம் அரும்பியுள்ள காலம்!

அன்றாட வாழ்க்கைக்கு சக்தி இன்றியமையாததாகும். நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய செயல்களெல்லாம் சக்தியின்றி நடைபெறாது. சக்தியில்லாமல உயிர் வாழ்தலும் இல்லை.

"மனிதன் இவ்வுலகில் தோன்றி 2,50,000 ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனினும் நமக்குத் தெரிந்த ஆதிநாகரிகங்கள் 8,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவையே! விவசாயம் ஆடு—மாடு—கோழி வளர்த்தல் நெசவு, மட்கலம் வனைதல், செங்கள் அறுத்தல், உலோக வேலை இவற்றை வைத்து உருவானவை அந்தப் பழைய நாகரிகங்கள்; மனிதன் இந்தத் தொழில் திறமைகளையெல்லாம் அடைவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. மனிதன் அந்தத் திறமைகளை அடைந்ததையும் அந்தப் பழைய நாகரிகங்கள் தோன்றியதையும் மனித வரலாற்றின் முதற் பெரிய யுகத்தின் தோற்றமாகக் கருதவேண்டும்.

"இந்தப் பண்டைய நாகரிகங்களைக்கடைப்பிடித்த மக்களுக்குள் நடையுடை பாவனை, பண்பாடு, சமூக அமைப்பு ஆகியவற்றில் பல வேறுபாடுகள் இருந்தன என்றாலும், அந்நாகரிகங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையான ஒற்றுமை ஒன்று உண்டு. உழுதல், நீர் இறைத்தல், பாரம் தூக்கிச் செல்லல், ஊர்வழி போதல் முதலிய வேலைகளுக்கு வேண்டிய சக்தி அனைத்தும் மனிதனுடைய உடல் வலிமையாலும், மிருகங்களின் உடல் உரத்தாலும் கிடைத்ததேயாகும். இரசாயன சக்தி—உதாரணமாகக் கட்டைகளை எரித்துப் பெறும் சக்தி சமையலுக்கும், பொருள்களைச் சுடவைப்பதற்கும், ஓரளவு உலோக வேலைக்கும் மட்டுமே பயன்பட்டது.

"பண்டைய நாகரிகங்கள் அத்தனையையும் தாங்கியது 'அடிமை'களின் உடல் உழைப்பேயாகும்; இதனை நாம் சிலசமயம் மறந்துவிடுகிறோம். கிடைக்கக்கூடிய சக்தி குறைவாக இருக்கும்போது நாகரிகத்தின் பயன்கள் சிலருக்கே கிடைக்க முடியும்.

"17, 18-ம் நூற்றாண்டில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் விருத்தியடைந்தது. முதல்தான், இந்தச் சமூக அமைப்பு மாறத் தொடங்கிற்று. இரசாயன சக்தியும் விசேடமாக பூமிக்கு அடியில் கிடந்த நிலக்கரி—எண்ணெய்—வாயு ஆகியவையும் எங்கும் பயன்படலாயின; இதுவே, இந்த இரண்டாவது பெரிய யுகத்திற்கு அறிகுறி. இதனால் தொழிலியல் அமைப்பான சமூகம் தோன்றிற்று; இந்த யுகத்தின் தனி இயல்பு இது.

"இந்த உலகத்தில் செலவாகும் சக்தியின் அளவு எவ்வளவு கூடியிருக்கிறது என்று நோக்கினால் திகைப்பு ஏற்படும். சுமார் 3,300 கோடி டன் நிலக்கரி மூலம் கிடைக்கும் சக்தியை 'அ' என்ற எழுத்தால் குறிப்பிடுப்பார்ப்போம். கிறிஸ்துவுக்குப் பிறகு $18\frac{1}{2}$ நூற்றாண்டுகளில் செலவான சக்தி அனைத்தையும் கூட்டிப் பார்த்தால், சராசரி ஒவ்வொரு நூற்றாண்டிலும் பாதியளவு 'அ'-தான் செலவாகியிருக்கிறது. ஆயினும் 1850-க்குள் சக்தி செலவாகும் வேகம் நூற்றாண்டுக்கு ஒரு 'அ'-வாக உயர்ந்துவிட்டது; இன்று அவ்வேகம் நூற்றாண்டுக்கு 10 'அ'-வாகும்.

"செலவாகும் சக்தியின் அளவு இவ்வாறு பிரமிப்பூட்டும் வகையில் உயர்ந்திருப்பதற்கு ஒரு காரணம் உலக மக்கள் தொகை வேகமாக உயர்ந்து வருவதாகும் என்று சொல்லலாம்; உலக மக்கள் தொகை கி. பி. 1-ம் ஆண்டில் சில பத்துக் கோடிகளாக இருந்தது என்றும், 1900-ம் ஆண்டில் 150 கோடியாயிற்று என்றும், 1930-ல் 200 கோடியாயிற்று என்றும், 1950-ல் 230 கோடியாயிற்று என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இன்னும் 50 ஆண்டு ஆவதற்குள் இந்த நூற்றாண்டின் இறுதியில் அது 350 கோடிக்கும் 500 கோடிக்கும் இடையே இருக்கும் என்பது நிபுணர்கள் கணக்கு.

"உலகத்தில் சக்தி செலவாகும் வேகம் அதிகமாவதைப் பார்த்தால், மண்ணுக்குள்ளிருக்கும் நிலக்கரி, எண்ணெய், உணவுப் பொருள்கள் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே தீர்ந்து போனாலும் போகக்கூடும். சுமார் 25 கோடி ஆண்டுகளாக இயற்கை சேர்த்துவைத்த இந்த எரிபொருள்களை நாம் சில நூற்றாண்டுகளில் தீர்த்துவிடுகிறோம். பூமியின் வயதைக் கணக்கிட்டால் ஒரு நொடிப் பொழுதில் தீர்த்துவிடுகிறோம் எனலாம்'

"இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, ஒரு உண்மை புலப்படும். இருக்கும் எரி பொருள்களை எரித்துத் தீர்த்துவிட்டோம் என்று நம்முடைய நாகரிகம் அழிந்து போகாமல் விளங்கவேண்டுமானால், சக்தி தரக்கூடிய புதிய ஒரு வழியைக் கட்டாயம் கண்டுபிடித்தேயாக வேண்டும்.

"எனவே, அணுசக்தியைக் கவனிக்கின்றோம். பின் தங்கிய நாடுகள் முழுவதும் தொழில் மயமாவதற்கும் நமது நாகரிகம் அழியாமல் இருந்து மேலும் வளர்வதற்கும் அணுசக்தி வெறும் ஓர் உதவி மட்டும் அல்ல; அது திராமல் கட்டாயம் வேண்டிய ஒன்றாகும். மனிதன் அணு சக்தியை வெளியிடவும், பயன்படுத்தவும் அறிந்துகொண்டது உலக வரலாற்றில் மூன்றாவது பெரிய யுகத்தின் தோற்றமாகும் என்று உணர்தல் வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

19-வது தடவையாக அணுகுண்டு வெடிப்பு?

ரஷ்யா சோதனை நடத்தியதாக பிரிட்டிஷ் - அமெரிக்கா அறிவிப்பு

லண்டன், ஏப். 5—

மார்ச் 6-ந் தேதியன்று ரஷ்யா ஒரு அணுகுண்டை வெடித்ததாக அமெரிக்க அணு சக்திக் குழு அறிவித்திருந்தது.

கடந்த புதன்கிழமையன்று மற்றொரு அணுகுண்டை ரஷ்யா வெடித்ததாக பிரிட்டிஷ் தற்காப்பு இலாகா அறிவித்துள்ளது; இதை அமெரிக்க அணு சக்திக் குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

ரஷ்யா அணுகுண்டுகளை வெடிப்பது இது 19-வது தடவையாகும்.

நன்றியறிவிப்பு

பாராளுமன்றத் தேர்தலில், நாகப்பட்டினம் தொகுதியில் நான் போட்டியிட்டேன்; கழக ஆணைப்படி வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப் படாமல், சனநாயகக் கடமையாற்றும் விழுமிய பணியினை மேற்கொண்ட கழகத்தின் கருத்துக்களை விரிந்த அளவு பரப்ப — இலட்சக்கணக்கான மக்களைச் சந்திக்க—நம்மைப் பற்றிப் புரியாதோர் புரிய நம் அணியிலே விரைய நல்ல வாய்ப்பை, இந்தத் தேர்தல் உருவாக்கியிருக்கிறது. காங்கிரஸ் தரப்பிலே பணம் பேசிற்று! அதன் பலன் அதிகம் என்பதை நாகைத் தேர்தல் ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திவிட்டது. பதவியும் அதிகார மமதையும், அச்சமூட்டலும், விலைபேசலும், வழக்கமான பித்தலாட்டப் பிரச்சாரங்களும் இலட்சியத்தை இடம் பெயர்த்துவிட்டது. பணக் கழியின் பயங்கர வேகத்தைத் தாங்காத மக்கள் சுருண்டனர்; சுருட்டிக்கொண்டனர் காங்கிரசார். பணநாயகம் வென்றது!

அத்துமீறிய ஆணவம், நாத்துடுக்கு, எடுத்தேன்—கவிழ்த்தேன் எனும் அகம்பாவம், அளவுக்கு மீறி தம்மைப் பற்றியும் தமது கட்சியைப் பற்றியும் போட்ட தப்புக் கணக்கு ஆகிய இவை, அகில உலக தேசீயம் பேசும் இயக்கத்திற்கு கல்லறை எழுப்புவதில் பெரிதும் துணை போயின!

அமைதியாகக் கட்டுப்பாடுடனும், கண்ணியத்தோடும், பொறுமை உணர்ச்சியோடும், பொறுப்போடும், அரசியல் நாகரீகம் வழுவாமல்—குன்றாமல் கட்சியின் கொள்கை வழி நின்று தன்னை மறந்து, தன் சொந்தவாழ்வை மறந்து, தாளமுடியாத சோகத்தைச் சுமந்து பணியாற்றிய நாகைத்தொகுதி தி. மு. கழகத் தோழர்களெல்லாம் திருநாட்டின் அரசியல் வரலாற்றில் புதியதோர் இடம் பெற்றனர். அவர்கள் உழைப்பு மிகப் பெரியது; அதைவிட, உள்ளம் விரிந்தது; சாமானியர்களல்ல என்ற எண்ணத்தை, ஊரறியப் பேசச் செய்திருக்கின்றனர்.

இந்தத் தேர்தலில் நாம் ஈடுபட்டோம் — நமது தரத்தை உயர்த்தியிருக்கின்றோம்!

தி. மு. கழக அபேட்சகனுகிய எனது வெற்றியை எதிர்நோக்கி உழைத்த கழகத் தோழர்களே! நலம் நாடுவோரே! நேர்மையாளர்களே! நடுநிலை தவறாத வாக்காளர்களே! திறமைக்கு மதிப்பளிப்போரே! உங்களுக்கெல்லாம் என் இதயங்கலந்த நன்றியும், வணக்கமும் உரித்தாகுக. தோல்வி கண்டு மனங்கலங்கி நிற்கும் என் அருமை உள்ளங்களே, ஆயாசப்படாதீர்கள்! தேர்தல் நமது இலட்சிய ஈடேற்றத்திற்குரிய வழிவகைகளிலே ஒன்று; ஒருசில கட்சியினரைப்போல் நாம் இதை வாழ்க்கைப் பிரச்சினையாக்கவில்லை. ஆகையினாலே, மனந்தளராமல் புத்துணர்ச்சியுடனும், புதுவேகத்தோடும்கொள்கைகளைப் பரப்புவதிலே ஈடுபடுவோம். காங்கிரசாரின் பணக் கழியின் தாக்குதலாலே படுகாயமுற்ற மக்களின் புண்ணாற்ற முற்படுவோம். எதிர்காலம் நம்முடையது. உற்சாகமும், நம்பிக்கையும் கலந்த எதிர்காலம் நம்மை கரங்காட்டி அழைக்கிறது. அந்த அன்பழைப்பை ஏற்று, முன்னேறுவோம்.

நாம் நெடுந்தொலைவு சென்றாக வேண்டும். தொடர்ந்து செல்வோம்; வெற்றி நமதே.

அன்பன்,

கி. மனோகரன்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்து கொள்ள

கடைசி தேதி: 9—4—57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

பதவிப் பித்தும், அவநம்பிக்கையும்!

காங்கிரசில் போட்டி போட்டு வளருகின்றன!

பீகாரில் கோஷ்டிச் சண்டை வலுக்கிறது

பாட்னாவில் பதிவான வாக்குகள் டில்லியில் எண்ணப்படும் விந்தை

[காங்கிரஸ் ஸ்தாபனத்தில் விழுந்துள்ள ஓட்டைகள் கணக்கில் அடங்காதவை; இனி என்றைக்கும் செப்பனிட முடியாதவை என்பதை, ஒவ்வொரு பிரதேசக் காங்கிரசிலும் தோன்றியுள்ள பிளவுகள் தெளிவாக்குகின்றன.]

பதவிப் பித்து

பதவிப் பித்தும், சயாகலமும் இன்றைய காங்கிரசாரைப் பிடித்தாட்டுகின்றன. விளைவு, போட்டி — பொறாமை—பூசல்—கோஷ்டிகள்—சண்டைகள் இத்தியாதி என்ற நிலைகள் வளருகின்றன.

இந்த வியாதி, பீகார் காங்கிரசாரையும் தொத்திக்கொண்டுள்ளது.

போட்டி

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள், தங்களுக்கு யாரைத் தலைவராக்குவது என்பதில் போட்டியிட்டுக்கொள்கின்றனர்.

கோஷ்டி

அவர்கள் முதன்மந்திரியாயிருக்கும் டாக்டர் ஸ்ரீகிருஷ்ணசின்ஹ, மற்றும் நிதி மந்திரியாயிருக்கும் டாக்டர் அனுக்ரக நாராயண சின்ஹ ஆகியோரின் தலைமையின் கீழ் இரு கோஷ்டிகளாக பிரிந்து நிற்கின்றனர்.

தேர்தல்

அதிகாரப்பற்றற்றவகையில் அவர்கள் கூடி, தங்களது தலைவராக மேற்கண்ட இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து தேர்தல் நடத்தியிருக்கின்றனர்.

மேலிடம்

மேலிடத்தின் சார்பில் காங்கிரஸ் பொதுச்செயலாளருள் ஒருவரான செளத்திரி என்பாரும், மத்திய மந்திரியான சத்தியநாராயண சின்ஹவும் வந்திருக்கின்றனர். அவர்கள் முன்னிலையில் காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் வாக்குப் பதிவு செய்துள்ளனர்.

அவநம்பிக்கை

ஆனல், பதிவான வாக்குகளைப் பாட்னாவில் எண்ணுவதில்: இரு கோஷ்டிகளுக்கு மிடையே மேலிடத்தவர் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதாம்.

டில்லிக்கு!

எனவே, பதிவான வாக்குகளை டில்லிக்குத் தூக்கிக்கொண்டு ஓடுவாராம், மேற்பார்வையிட வந்த மேலிடத் தூதுவர்கள்!

நேரு பண்டிதர் முன்னிலையில்

இந்த வாக்குகள், டில்லியில் நேரு பண்டிதர், தேபர் ஆகியோரின் முன்னிலையில் எண்ணப்படுமாம்.

பின்னர்

இந்த எண்ணிக்கையில் அதிகம் பெறும் நபர், அதிகாரபூர்வமான தேர்தலில் ஒருமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மேலிடம் கட்டளையிடுமாம்!

பதவிப் பித்து, சயாகலம், பரஸ்பர அவநம்பிக்கை இவை எல்லாம், காங்கிரசின் இலட்சணத்தை அம்பலப்படுத்துகின்றன.

இருந்தும் என்ன பலன்?

அண்ணு

சுற்றுப் பயணம்

ஏப். 11: காஞ்சிபுரம்
12: வேளியூர்
13: திருவள்ளூர் கலைக் கழகம்
14: குளித்தலை
15: காலை — மாயவரம்;
,, மாலை — பொன்மலை திருச்சி
16: பெரம்பலூர்
17: நெல்லிக்குப்பம்
18: விருத்தாசலம்
19: தம்மம்பட்டி
20: ஆரணி (வ. ஆ.)
21: சென்னை

சென்னை—பார்க்டவுன் இளைஞர் முத்தமிழ் மன்றத் துவக்க விழா

8—4—57 மாலை 7½ மணிக்கு, மேற்படி மன்றத் துவக்க விழா, சென்னை—பார்க்டவுன் (28-வது வட்டம்) 2/2 நைனியப்பநாய்க்கன் தெருவில், தோழர் செயராமன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சே. செங்குட்டுவன், கே. எம். மணி, நடராசன், சி. தியாகராசன், வி. கே. டி. அரசு, அறிவொளி மற்றும் பலர் பேசுவர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளைப் பிரித்துத் தள்ளும் விபரீதச் செய்கை

காங்கிரஸ் ஆட்சியில் 'இந்நாட்டு மன்னர்கள்' அடையும் வேதனை!

சென்னை, ஏப். 5—

சென்னை வியாசர்பாடி பகுதியில், புளியந்தோப்பு சுயரோக மருத்துவவிடுதிக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் ஏழைக் குடிமக்கள் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

குடியிருப்பதற்கு அவர்கள் கட்டிக்கொண்டுள்ள குடிசைகள் சட்ட விரோதமானவையாம். இதற்கு முன் நான்கு தடவை சென்னை நகரசபை ஊழியர்கள் அந்தக் குடிசைகளை பிரித்துத் தள்ளி, மக்களை அவதிக்குள்ளாகியுள்ளனராம்.

ஒவ்வொரு தடவையும் குடிசைகளைப் பிரித்துத்தள்ளிய சில மணி நேரத்திற்கெல்லாம் அவதிக்குள்ளான மக்கள் மீண்டும் தங்கள் செலவில் குடிசைகள் கட்டிக்கொண்டனராம். மீண்டும் ஐந்தாவது முறையாகக் குடிசைகளைப் பிரித்துத்தள்ளியதால் வேதனையுற்ற மக்கள், சென்னை நகரசபை கட்டிடத்தின்முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

குடியிருக்க வேறு வழியில்லாது, குடும்பத்துடன் தவிக்கும் இவர்கள், தங்கள் குறைகளை எடுத்துக்கூறி, அதே இடத்தில் மீண்டும் குடிசைகள் போட்டுக்கொள்ள அனுமதிக்குமாறு கோரினர்.

அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சிக்குத் தனிப் பீடம்

பேரறிஞர்கள், இலக்கிய புலவர்கள் கொண்ட ஆய்வுக் குழு நியமனம்

அண்ணுமலைநகர், ஏப். 7—

தமிழ் மொழி, இலக்கியம், கலாச்சாரம் ஆகியவை சம்பந்தமாக முக்கியமான திட்டங்கள் வகுக்க அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில், ஒரு தமிழ் ஆராய்ச்சிப் பீடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வகையில் இப்போது உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும் செயல் திட்டத்தில் சொல் ஆராய்ச்சி, அகராதி தயாரிப்பு, ஆங்கில - தமிழ் அகராதி தயாரிப்பு ஆகியவை சேரும்.

இந்தப் புதிய தமிழ்ப் பீடஇலாகாவுக்குரிய ஆலோசனை கூறவும், வழிதுறைகள் வகுக்கவும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மொழி இயல் வல்லுநர்களையும், மொழிகள் வரலாற்றில் புலவர்களையும் கொண்ட குழு ஒன்றையும் அண்ணுமலைப் பல்கலைக் கழக சிண்டிகேட் அமைத்திருக்கிறது.

ஆகஸ்டு 15, 16!

புதுடில்லி, ஏப். 7—

இந்திய சுதந்திரத்தின் 10-ம் ஆண்டு பூர்த்தியையும், இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டத்தின் 100 ஆண்டு விழாவை ஒட்டியும் இந்தியாவிலும், புதுவையிலும் ஆகஸ்டு 15, 16-ந் தேதிகளில் பொது விடுமுறை நாட்களாக இந்திய அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

எகிப்து மீது மீண்டும் தாக்குதலா?

கெய்ரோ, ஏப். 7—

ஜோர்தான்—இஸ்ரேல் எல்லையில், இஸ்ரேல் துருப்புகளைக் குவித்து வருவது பற்றி எகிப்து கவலை தெரிவித்திருக்கிறது.

மீண்டும் ஓர் முறை இஸ்ரேல் தன் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் எகிப்து அச்சம் தெரிவித்திருக்கிறது.

பிரெஞ்சு சர்க்கார் இஸ்ரேலுக்கு விமானப் படை உதவி தரச் சம்மதித்திருப்பதாயும், மேலும் பிரெஞ்சு கப்பற்படை சூயஸ் அருகே நகர்ந்திருப்பதாயும் கிடைத்துள்ள தகவல்கள், எகிப்தின் அச்சத்தை உறுதி செய்கின்றனவாம்.

பிரெஞ்சுத் துருப்புகள் சைப்ரசிற்கு வந்திருப்பதாகவும் மேலும் ஒரு செய்தி மூலம் தெரியவருகிறது.

ஆமதாபாத்-மணிநகர் 'நம் நாடு' விற்பனையாளர்

ச. சந்திரன்,
எண், 341/1, பத்வாலாசால்,
மணிநகர் (அஞ்சல்)
ஆமதாபாத்-8.

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

★

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் தொகுதித் தேர்தல் வழக்கைச் சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு திறம்பட நடத்தவேண்டிக் கீழ்க்கண்ட வகையில் அன்புடன் வழக்கு நிதி தந்துள்ளார்கள் :—

		ரூ.	அ.	பை
முன் வரவு	...	211	0	0
மலேயா பத்துகஜா கிளை அலங்கரிக்கும் தொழிலாளர்களும், பிற அன்பர்களும்	...	132	8	0
ஒரு ஆதரவாளர்	...	100	0	0
வி. கோவிந்தசாமி, சென்னை	...	1	9	3
அண்ணு அறிவகம், 9-வதுவட்டம்	...	24	8	6
து. பொற்கைப்பாண்டியன், தேனி	...	2	0	0
எம். சம்பந்தம்&பிரதர்ஸ், தேசமுகிப்பேட்டை	...	10	0	0
பி. ஏ. மாசிலாமணி, சென்னை	...	3	0	0
எஸ். ஏ. அங்கப்பன், சூலூர்	...	1	0	0
தி. திருச்சி மில்ஸ் குமாஸ்தாக்கள், திருச்சி	...	10	0	0
கி. கோவிந்தராசன், சேலம்	...	1	0	0
சிங்கப்பூர் தோழர்கள் எஸ். சேகரன் மூலம் :	...	37	0	0
குன்றத்தூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில்	...	44	0	0
காரைக்குடி தோழர்கள் கருப்பையா மூலம் :	...	7	12	0
ஆக மொத்தம்	...	585	5	9

நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி :
இரா. நெடுஞ்செழியன்—26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

உழைப்பின் சக்தி....

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அணுவிலிருந்து மின்சாரம் தோற்றுவிக்கும் விசைச் சக்தி நிலையங்கள் பல அடுத்த பத்தாண்டுக் காலத்தில் உலகில் பல இடங்களில் நிறுவப்படும் என்பது பற்றிச் சற்றும் ஐயம் இல்லை. உலகத்தில் தேவைப்படும் விசைச் சக்தியை அணுப் பிளவினால் தோன்றும் சக்தி ஓரளவு கொடுக்கும்; இப்போது நம்முடைய வாழ்நாளில் தொடங்குகின்ற இந்த முக்கியமான காலம், இனி அணுயுகத்தின் பண்டைய காலம் என்றும் கருதப்படலாம். ஏனெனில் அணுசக்தியை, அணுப் பிளவினால் மட்டும் அன்றி, நீர்வளிக் குண்டில் செய்வது போல, அணுப் பிணைப்பினாலும் பெறலாம் என்பது நன்கு தெரிந்ததே.

அணுப் பிணைப்பினால் உண்டாகும் சக்தியைக் கட்டுப்பாடான முறையில் தோற்றுவிக்கும் வழி ஒன்று அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் கண்டுபிடிக்கப்படும் என்று துணிந்து கூறுவேன். அப்படிக் கண்டுபிடித்ததும், சக்தியைப் பற்றிய பிரச்சினைகளெல்லாம் உண்மையாகவே தீர்ந்துவிடும்; ஏனெனில், பரந்த கடல்களிலே கனமான 'ஹைட்ரஜன்' எவ்வளவு ஏராளமோ, அவ்வளவு ஏராளமாக அந்த எரிபொருளும் கிடைக்கத் தொடங்கிவிடும்."

தேர்தல் அறிக்கை...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லும் மலையாள மொழியை உபயோகிப்பது கட்சியின் பரந்த கொள்கையாகும். பல்கலைக் கழக கல்வி உட்பட எல்லாக் கட்டங்களிலும் மலையாள மொழியில் கல்வி போதிக்கப்படும். இதை உடனடியாக எவ்வளவுக்கு நிறைவேற்ற முடியும் என்பது குறித்து சம்பந்தப்பட்ட மக்களுடன் ஆலோசிக்கப்படும்.

மந்திரிகளுக்குக் கட்டுத் திட்டம்!

மந்திரிகள் தங்களுடைய சொந்த வாழ்க்கையிலும், உத்தியோக வாழ்க்கையிலும் ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தங்கள் உறவினர்கள், நண்பர்கள், சகாக்கள் நிர்பந்தங்களுக்கு மந்திரிகள் உட்படமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் மக்களிடையே ஏற்பட்டால்தான் கண்ணியமான சர்க்கார் இயங்கமுடியும். மந்திரிகளுக்கு சிலவித ஒழுங்கு விதிகளை வகுப்பது அவசியம். இப்பிரச்சினை பற்றி எங்களிடையே நடக்கும் விவாதங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இது சம்பந்தமாக மக்களிடமிருந்தும் ஆலோசனைகள் வரவேற்கப்படும்.

டிராக்டர்கள் கட்டணம்

75 சதவிகிதத்தை விவசாயிகள் ஏற்கவேண்டுமாம்

சென்னை, ஏப். 5—

தரிசு நிலங்களைப் பண்படுத்தப் பயன்படுத்தப்படும் அரசாங்க 'டிராக்டர்'கள் 'புல்டோஜர்'கள் இயந்திரங்களுக்கு வாடகைக் கட்டணத்தில் 1—4—57 முதல் 25 சதவிகிதம் உதவித் தொகையாக அனுமதிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்த உதவி 10 ஏக்கருக்கு மேல் இல்லாத குடியானவர்களுக்கு மட்டுமே தரப்படுமாம்.

16 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி

ரூ. 90 கோடி செலவில் ஆந்திர அரசின் திட்டம்

ஐதராபாத், ஏப். 4—

சுமார் 16 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த ஆந்திர மாநிலத்தில் கோதாவரி ஆற்றின் குறுக்கே பொச்சம்பாடு அருகில் ஒரு அணை கட்டுவதற்கு ரூ. 90 கோடி செலவில் ஒரு திட்டமும், இச்சம்பள்ளி அருகில் மின்சார உற்பத்திக்கு ரூ. 27 கோடி செலவில் ஒரு திட்டமும் ஏற்படுத்த முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் திட்டங்களை நன்கு ஆராய்வதற்கு ஆந்திர அரசு உடனடியாக ரூ. 19 இலட்சம் ஒதுக்கியிருக்கிறதாம்.

தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள்

சென்னை, ஏப். 5—

1957-ம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 1 புள்ளி குறைந்து 366 புள்ளிக்கு வந்து விட்டதென்றும், கரி, விறகு விலையில் குறைவு ஏற்பட்டதே இதற்குக் காரணமென்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.